செய்தி வெளியீடு 342　　　　நாள்: 10.6.2011

# பத்திரிகை செய்தி

**சர்க்கரை ஆலைகளின் செயல்பாடு குறித்து தொழில் துறை அமைச்சர் ஆய்வு**

தமிழகத்திலுள்ள அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் கடந்த ஆண்டு அரவைத் திறன், சர்க்கரைக் கட்டுமானம், நேர இழப்பு, ஆலை ஈட்டிய லாபம், ஆகியவற்றை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு சி. சண்முகவேலு அவர்கள் ஆலைவாரியாக ஆய்வு செய்தார்.

தமிழகத்தில் கரும்பு உற்பத்தி அதிகரிக்க அறிவுரைகள் வழங்கி, ஆலைகள் முழு அரவை திறனோடு இயங்க, வரும் அரவை ஆண்டிற்கு கரும்பு நடவினை முழுமையாக மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கினார்.

அமராவதி மற்றும் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இயங்கும் வடிப்பகங்களின் செயல்பாட்டினை மேம்படுத்தி லாபம் ஈட்டும் வகையில் இயங்க வேண்டுமென வலியுறுத்தினார்.

தற்போது நடைபெற்று வரும் இணை மின் உற்பத்தி மற்றும் ஆலைகளை நவீனமயமாக்கும் பணிகளை குறித்த காலத்திற்குள் செய்து முடிக்க வேண்டுமென்று தெரிவித்தார்.

கரும்பு விவசாய அங்கத்தினருடன் கலந்தாய்வு கூட்டங்கள் நடத்தி ஆலையை திறம்பட இயக்க நடவடிக்கைகள் எடுக்குமாறும், கரும்பிற்குண்டான கிரையத் தொகையை உடனுக்குடன் நிலுவையின்றி வழங்குமாறும், ஆலைகளின் நட்டத்தை குறைத்து லாபத்துடன் இயக்க வழிவகைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறும் ஆலை நிர்வாகிகளை கேட்டுக் கொண்டார்.

ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் குறைகளை உடனுக்குடன் கேட்டறிந்து அவர்களை ஊக்கப்படுத்தி உற்பத்தி திறனை அதிகரிப்பதோடு தொழில் அமைதி காக்க, ஆலை தலைமை நிர்வாகிகள் முழு மனதுடன் ஈடுபட வேண்டும் எனவும் ஆலோசனை வழங்கினார்.

இந்த ஆய்வின் போது, தமிழக அரசின் தொழில் துறை முதன்மை செயலர் திரு சுந்தர தேவன், இ.ஆ.ப., சர்க்கரைத் துறை முதன்மை செயலர் மற்றும் ஆணையர் திரு ராஜீவ் ரஞ்ஜன், இ.ஆ.ப., சர்க்கரைத் துறை கூடுதல் இயக்குநர் திரு. ராஜேந்திரன், தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணைய தனி அலுவலர் திரு ஜெயசிங் செல்வராஜ் மற்றும் சர்க்கரை ஆலைகளின் தலைமை நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9